Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் கால கட்டடக்கலையில் தொழில்நுட்பம்

வே. வேலாயுதம்
காமதேனு கலை அறிவியல் கல்லூரி, சத்தியமங்கலம்.

25

**முன்னுரை:-**

அழகுக் கலைகள் ஏழனுள் முதலாவதாகக் கருதப் பெறுவது கட்டடக் கலையேயாகும். வீடுகள், மாளிகைகள்,அரண்மனைகள் முதலியவை கட்டடங்களே. ஆனாலும், கோவில்களே கட்டடக் கலையில் முதலிடம் பெறுகின்றன.

கோவில்கள் முதலில் மரத்தினால் கட்டப்பெற்றன. மரக் கட்டடங்கள் வெயிலினாலும் மழையினாலும் தாக்குண்டு விரைவில் பழுதுபட்டு அழிந்துவிடும் தன்மையன. அவை பழுதுபடாமல் இருப்பதற்காக அவற்றின்மேல் செப்புத் தகடுகள் வேய்வது பண்டைக்கால வழக்கம்.

மரக் கட்டடங்கள் விரைவில் பழுதடைவதோடு எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும். ஆகவே, பிற்காலத்தில் செங்கல்லினாலும் சுண்ணாம்பினாலும் கோவில்களைக் கட்டினர். இவையும் சில நூற்றாண்டுகள்தாம் நீடித்திருக்கக் கூடியனவுமாக இருந்தன.

பல்லவர்கால கட்டடக்கலையில் தொழில்நுட்பம்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

**ஆரம்பகால கட்டுமான பொருட்கள்**

ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் சுடுமண் மரம், சுதை, மூங்கில், வைக்கோல், புல் மற்றும் செங்கல் ஆகியவை கட்டுமானங்களில் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகளும், மன்னர்மாளிகைகளும் , வணிக நிறுவனங்களும், பொது இடங்களும், கோவில்களும், மண்டபங்களும், இருந்ததற்கான அடையாளங்கள் இன்றும் பல இடங்களில் உள்ளன. ஆறாம் நூற்றாண்டுக்கு பின்னர் கட்டுமானப் பணிகளில் கருங்கற்களை பயன்படுத்தப்பட்டு கட்டிடங்கள் உருவாகின.

**கட்டமைப்பு முறைகள்**

வீடுகள் மற்றும் குடியிருப்புகள் அமைப்பதில் 'பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனை வகுத்து' என்ற சங்கப்பாடலுக்கேற்ப மக்களின் தேவைகள் மற்றும் வசதி ஆகியவற்றை அனுசரித்து கட்டடங்களை மக்கள் அமைத்துக்கொண்டனர். தமிழக கட்டடக்கலையில் பொதுவான அம்சங்கள் அஸ்திவாரம், சுவர்கள் மற்றும் மேற்கூரை, விமானம் அல்லது கோபுரம் ஆகியவை எந்தவொரு கட்டிடமும் இந்த அடிப்படையிலேயே கட்டப்பட்டன. அவ்வாறு அமைந்த வீடுகளின் நிலைகளில் அழகிய வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. காற்றுவசதிக்காக வீட்டின் சுவர்களில் விதவிதமான ஜன்னல்கள் பொருத்தப்பட்டன என்கிறது நெடுநல்வாடை.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**கட்டிடக் கலையில் சிறப்புப்பெற்ற பல்லவ மன்னர்கள்**

பல்லவர் காலக் கட்டடக்கலையை மகேந்திரவர்மன் வகை,நரசிம்மன் வகை, இராஜசிம்மன் வகை, அபாரசிதவர்மன் வகை எனப் பிரிக்கலாம். மகேந்திரன் வகை

மகேந்திரன் காலத்திற்கு முன் குடைவரைக்கோயில்கள் இல்லை என்பதை மண்டகப்பட்டுக் கல்வெட்டு மூலம் அறியலாம். மகேந்திரன் காலத்திற்கு முன்பு தமிழ் நாட்டில் மரம், மண், செங்கல், சுண்ணாம்பு ஆகியவற்றால் கட்டப்பட்ட கோயில்களே இருந்தன என்பதைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.மகேந்திரன் காலத்தில் பெரும்பாலும் குகைக்கு கோயில்களே அமைக்கப் பெற்றன.பல்லாவரம், மாமண்டூர், திருச்சிராப்பள்ளி, வல்லம் முதலிய இடங்களில் குகைக் கோயில்கள் உள்ளன.

நரசிம்மன் காலத்தில் புதியதொரு முறை கையாளப்பட்டது.தனிப் பாறைகளிலும் ஒற்றைக் கற்களிலும் கோவில்களைச் செதுக்கிப் புகழ் பெற்றான். மாமல்லபுரத் தேர்களனைத்தும் பாறைகளில் செதுக்கப்பட்டவை.ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அருச்சுனன் தவம்,சிங்கம்,குரங்கு ஆயன குறிக்கும் சிற்பங்கள் அழகானவை. பாறைச்சுவர்ளில் மிருகங்கள், பறவைகள்,நாகங்கள், தேவர்கள் இவர்களின் உருவங்கள்புடைப்புச்சிற்பங்களாகச்செதுக்கப்பட்டன.

சதுரக் கருங்கற்களை அடுக்கிக்கட்டப்பட்ட கற்கோயிலை முதன்முதலாகப் பரமேஸ்வரவர்மன் கூரம் என்னும் ஊரில் அமைத்தான்.அதனைப் பின் பற்றி இராசசிம்மன் காலத்தில் கற்கோயில்கள் அமைக்கப்பட்டன. அக்கோயில்கள் சிறந்த வேலைப்பாடு உடையவை. காஞ்சியில் உள்ள கைலாசநாதர் கோவில், வைகுண்ட பெருமாள் கோவில், மாமல்லபுரம் கடற்கரை கோவில் ஆகியவை பல்லவர் கட்டடக் கலைச் சிறப்பை உணர்த்தும். இக்கோவில்களில் சிங்கச் சிலைகளால் தாங்கப்பட்ட தூண்கள் உள்ளன.

**கட்டடக் கலையின் புதுமை**

**குகைக் கோவில்கள்**

"செங்கல் சுண்ணம்பு மரம் உலோகம் முதலியவை'இல்லாமலே பிரம ஈசுவர விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது"

மகேந்திரவர்மன் காலத்துக்கு முன்னே, நமது நாட்டுக் கோயில் கட்டடங்கள் செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலிய பொருள்களைக் கொண்டு உண்டாக்கப்பட்டன என்பதும், இவ்வரசன் காலத்தில்தான் பாறைகளைச் செதுக்கி உண்டாக்கப்படும் குகைக் கோவில்கள் புதிதாகச் சமைக்கப்பட்டன என்பதும் இதனால் தெரிகின்றன.

குகைக் கோயிலை அமைக்கும் புதிய முறையை ஏற்படுத்திக் கட்டடக் கலையில் ஒரு புரட்சியை உண்டாக்கிய மகேந்திரவர்மன், பல குகைக் கோயில்களை அமைத்திருக்கிறான். சென்னைக்கு அடுத்த பல்லாவரத்திலும், காஞ்சிபுரத்துக்கு அடுத்த பல்லாவரத்திலும், திருச்சிராப்பள்ளி மலையிலும், மண்டகப்பட்டு,மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, வல்லம், மாமண்டூர், தளவானுர், சித்தன்னவாசல் முதலிய ஊர்களிலும் இவ்வரசன் அமைத்த

குகைக்கோயில்கள் உள்ளன.

மகேந்திரவர்மனுக்குப் பிறகு, அவன் மகன் மாமல்லனான நரசிம்மவர்மனும், அவனுக்குப் பின்னர் பரமேசுவரவர்மன் முதலியவர்களும் மாமல்லபுரம் (மகாபலிபுரம்), சாளுவன்குப்பம் முதலிய இடங்களில் குகைக் கோயில்களையும் "இரதக் " கோயில்களையும் பாறைகளில் அமைத்தார்கள்.

கருங்கற் பாறைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட இக்குகைக் கோயில்களில், மரத்தில் செய்யப்பட்ட மரவேலை போன்ற சில அமைப்புகள் காணப்படுகின்றன.இந்த அமைப்புகள், பண்டைக்காலத்தில் மரங்களினால் கோயில்கள் கட்டப்பட்டன என்பதை காட்டுகின்றன.

கி .பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொண்டை நாட்டையும் சோழ நாட்டையும் மகேந்திரவர்மன் என்னும் பல்லவ அரசன் அரசாண்டான். இவன் ஏறக்குறைய கி.பி 600 முதல் 630 வரையில் ஆட்சி செய்தான். இவன் காலத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் இருந்தார்.இவ்வரசன் கோயில் கட்டட அமைப்பில் புதிய முறையை ஏற்படுத்தினான். பெரிய கற்பாறைகளைக் குடைந்து அழகான "குகைக் கோவில்" களை (பாறைக் கோயில்களை ) அமைத்தான்.பாறையைச் செதுக்கித் தூண்களையும் முன்மண்டபத்தையும் அதற்குள் திருவுண் ணாழிகையையும் (கருப்பக் கிருகத்தையும் )அமைக்கும் புத்தம் புதிய முறையை இவன் உண்டாக்கினான்.

**பாறைகளில் கட்டுமானங்கள்**

தமிழக கட்டிடக்கலையில் பல்லவர்காலம் புதிய பார்வையை உண்டாக்கியது அவர்களது கட்டிடக்கலை அமைப்புகள், குடைவரை என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். குடைவரை, கற்றளி, மற்றும் கட்டுமானகோவில் என்ற மூன்று விதங்களில் அமைந்தன. குடைவரை என்பது குறிப்பிட்ட பாறையின் ஓரிடத்தில் தொடங்கி கட்டுமான வடிவமைப்பிற்கு ஏற்ப பாறையை சரியாக செதுக்கிச் செல்ல வேண்டும். அந்த நிலையில் பாறைகளில் விரிசல்கள் உருவானால் பணி கைவிடப்படும். என்ற நிலையில் தக்க ஒலியியல் சோதனைகள் செய்து கற்களின் உறுதி கண்டறியப்பட்டது .

தமிழர் கட்டடக்கலையில் கற்றளி என்பது கற்களைக் கொண்டு கட்டப்படும், கட்டுமான கோயில்களாகும். அவற்றில் முக்கியமானது மாமல்லபுர கடற்கரை கோவில் ஆகும். யுனஸ்கோ அமைப்பால் புராதன சின்னமாக அது அறிவிக்கப்பட்டுள்ளது. நற்பதைந்து அடி உயரத்தில், கட்டுமான கோவில்களுக்கும், தமிழரின் கட்டுமான தொழில் நுட்பத்திற்கும் இன்றும் எடுத்துக்காட்டாகஉள்ளது.

**கற்றளிகள்**

கி.பி .7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் ஆன இராஜசிம்மன் காலத்தில் கற்றளி அமைக்கும் முறை ஏற்பட்டது. கற்றளி என்றால் கற்கோயில் என்பது பொருள். கருங்கற்களை ஒன்றின்மேல் ஒன்றாகஅடுக்கிக் கட்டப்படும் கோயில் கட்டடங்களுக்குக் கற்றளி என்பது பெயர். சுண்ணம் சேர்க்காமலே இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

மகாபலிபுரத்தில் கடற்கரையயோரமாக உள்ள கற்றளியும் காஞ்சிபுரத்தில் கயிலாசநாதர் கோயில் என்று இப்போது பெயர் வழங்கப்படும் இராஜ சிம்மேச்சரம் என்னும் கற்றளியும்,

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

பனமலை என்னும் ஊரிலுள்ள கற்கோயிலும் முதன்முதல் அமைக்கப்பட்ட கற்றளிகளாகும். இக்கற்றளிகள் உண்டாக்கப்பட்டு ஏறக்குறைய 1200 ஆண்டுகளாகியும் அவை இப்போதும் உள்ளன.

கற்றளி கோயில்களுக்கு கற்களை தேர்வு செய்யும் போது, அந்த கற்களில் ஓலி எழுப்பி, திடமான கற்களை மட்டுமே தேர்வு செய்தார்கள் அத்தகைய தொழில் நுட்பத்திறன் பல்லவர் கால கட்டிடக் கலைக்கு சான்றாகும்.

**தொகுப்புரை:-**

பிற்கால பல்லவ மன்னர்கள் கட்டடக் கலையில் சிறந்த விளங்கியதோடு, கற்களின் ஓசை தொழில்நுட்பம் கொண்டு கோயில் அமைத்தது பிற்கால சோழ பேரரசு கற்கோயில் கட்டுவதற்கு வழிகாட்டியது என்பதை அறிய முடிகிறது. பல்லவர் கற்களில் உள்ள ஒலியைக் கொண்டு திடமான கற்களை அறியும் தொழில்நுட்பமும், கோயில் கட்டிய திறமும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

**பார்வை நூல்கள் :**

1. தமிழர் வளர்த்த அழகு கலைகள் - மயிலை சீனி வெங்கடசாமி
2. தமிழ் நாட்டு வரலாறு - முனைவர் பா . இறையரசன்
3. தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும் - டாக்டர் கே. கே. பிள்ளை